# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 புரட்டாதி 14 செவ்வாய்க்கிழமை 30.09.2025 கதிர் 325










# உரிமைகளை தர பின்னடிக்கும் அநுர அரசு யாழ்.பல்கலை நுழைவாயிலை மறித்து ஆசிரியர் சங்கத்தினர் போர்!




தமக்கான ஊதிய உயர்வு மற்றும் கடந்தகாலங்களில் கிடைக்கப்பெற்று தற்போது நிறுத்தப்பட்ட சில சலுகைகளை மீள வழங்கல் உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து யாழ்பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், இலங்கை பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனத்துடன் இணைந்து ஒரு நாள் அடையள போராட்டம் ஒன்றை இன்றையதினம் முன்னெடுத்தனர்.

யாழ் பல்கலைக்கழகத்தின் பிரதான நுழைவாயிலை மறித்து இன்று காலை முன்னெடுக்கப்பட்ட குறித்த எதிர்ப்பு அடையாளப் போராட்டம் பல்வேறு கோசங்கள் அங்கிய பதாதைகளை ஏந்தியவாறு முன்னெடுக்கப்பட்டது.

இது குறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த பல்கலையின் ஆசிரியர் சங்க தலைவர் கலாநிதி விக்னேஸ்வரன் -

இன்றைய அரசின் கல்வி அமைச்சர், ஜனாதிபதி உள்ளிட்டவர்களுடன் எமது பிரச்சினைகள் குறித்து பலசுற்றுப் பேச்சுக்களை நடத்தி, தீர்வை வழங்க அவர்கள் இணங்கிய நிலையில், தீர்வுகளை நடைமுறைபடுத்துவதில் காலதாமதம் அல்லது இழுத்தடிப்பு நிலை இருந்துவருவதால், அதற்கு எமது எதிர்ப்பை வெளிக்கொணரும் வகையிலும் தீர்வை விரைவுபடுத்தக் கோரியுமே இந்த போராட்டத்தை நாம் முன்னெடுக்கின்றோம்.

இந்த அரசு தற்போது கொண்டுவந்துள்ள சம்பள சீரமைப்பில் பல்கலைக்கழக ஆசிரியர்கள் கடுமையாக பாதிக்கப்படும் நிலை இருக்கின்றது.

அதேபோன்று கொரோனா உள்ளிட்ட பல அனர்த்தங்களால் பல்கலைக்கழகத்தின் உட்கட்டமைப்பு வசதிகள் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மாணவர் அனுமதிப்பும் அதிகரித்துள்ளதால் மாணவர்களை உரிய ஆராச்சி முறையிலான கற்பிதங்களை செய்வதில் பல நெருக்கடிகள் இருக்கின்றன.

மேலும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் பிள்ளைகளுக்கு தரம் மிக்க பாடலைகளில் முதலாம் தரத்தில் இணைப்பதற்கான சலுகைகள் வழங்கப்பட்டு வந்தது. அதை இந்த அரசு நிறுத்தியுள்ளது.

விரிவுரையாளர்கள் பலர் வெளி நாடுகளுக்கு சென்றுள்ளமையால் அவர்களது வெற்றிடங்களை நிவர்தி செய்வதற்கான நடவடிக்கையை இன்றைய அரசு எடுக்காதுள்ளதால் விரிவுரையாளர்கள் கடும் சுமைகளுக்குளாகியுள்ளனர்.

7

## சஷீந்திர ராஜபக்ஷ மீண்டும் விளக்கமறியலில்



கொழும்பு, செப் .30

முன்னாள் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷவை எதிர்வரும் ஒக்டோபர் 14ஆம்திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சந்தேகநபர் இன்று நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்ட போதே கொழும்பு பிரதான நீதவான் அசங்க எஸ். போதரகம இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

7

## பருத்தித்துறை பிரதேசசபை அமர்வில் சலசலப்பு ஒன்பது உறுப்பினர்களுடன் நடைபெற்ற அமர்வு



பருத்தித்துறை , செப் .30

பருத்தித்துறை பிரதேச சபையின் மாதாந்த கூட்ட அறிக்கையில் திருத்தம் செய்யப்படாமையை காரணம் காட்டி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்துள்ளனர்.

7

## பொதுமக்களுக்கு சலுகை நிவாரணங்கள் வழங்கும் சூழல் உருவாகியுள்ளது!

கொழும்பு, செப் .30

அரசாங்கத்தின் சகல துறைகளிலும் வருமானம் அதிகரித்துள்ளதால் பொதுமக்களுக்கு சலுகைகள் , நிவாரணங்களை வழங்கும் சூழல் ஏற்பட்டுள்ளதாக அமைச்சர் சுனில் ஹந்துன்னெத்தி குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைக்கு

7



## மகிந்த மற்றும் ரனில் காலத்தில் கூட நடக்காத செயற்பாடு! மைத்திரி குணரத்ன விமர்சனம்

கொழும்பு, செப் .30

முன்னாள் ஜனாதிபதிகளான மகிந்த மற்றும் ரணில் ஆகியோர் ஒருபோதும் இலஞ்சம் மற்றும் ஊழல், மோசடி தவிர்ப்பு விசாரணை ஆணைக்குழுவில் அரசியல் நியமனங்களை

7





# பெருந்தொகையான போதைப்பொருளுடன் ஒருவர் கைது

கொழும்பு, செப் .30ந

கொழும்புவடக்குகுற்றவிசாரணை பிரிவு அதிகாரிகளினால் ஏஸ் போதைப்பொருள், ஹெரோயின் மற்றும் போதை மாத்திரைகளுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு வடக்கு குற்ற விசாரணை பிரிவு அதிகாரிகளுக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய நேற்று பிற்பகல் மட்டக்குளிய பொலிஸ் பிரிவின் சிறிவர்தன வீதிப் பகுதியில் முன்னெடுக்கப்பட் சோதனையின் போது அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது சந்தேக நபரிடம் இருந்து விற்பனைக்காக தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த 33 கிலோகிராம் 270 கிராம் ஏஸ், 408 கிராம் ஹெரோயின், 200 போதைப்பொருள் மற்றும் 7,400 ஹெரோயின் (சரஸ்) துண்டுகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளது.

கைதான சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காக மட்டக்குளிய பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் மட்டக்குளிய, சமித்புர பகுதியைச் சேர்ந்த 38 வயதுடையவர் என குறிப்பிடப்படுகிறது.

விசாரணையின் போது, சந்தேக நபர் ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளி மற்றும் போதைப்பொருள் கடத்தல்காரரின் நெருங்கிய நண்பர் என்பது தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் மட்டக்குளிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.(ஐ)

# சிறுவர் நன்னடத்தை நிலையத்திலிருந்து தப்பிச் சென்ற 15 சிறுவர்களில் 05 பேர் கைது

கொழும்பு, செப் .30

கம்பஹா - சப்புகஸ்கந்தையில் உள்ள மாகொல சிறுவர் நன்னடத்தை நிலையத்திலிருந்து தப்பிச் சென்ற 15 சிறுவர்களில் 05 பேர் நேற்று கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்கள் தற்போது மாகொல சிறுவர் நன்னடத்தை நிலையத்தின் காவலில் இருப்பதாகவும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் அவர்கள் குறித்த இல்லத்தில் இருந்து தப்பிச்சென்றதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

தப்பிச் சென்ற 15 சிறுவர்களில் 4 பேரைத்தவிர 11 பேரும் போதைப்பொருள் கடத்தல் குற்றச்சாட்டுக்கு உள்ளானவர்கள் என பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன. மேலும், தப்பியோடியவர்களில் இருவர் இதற்கு முன்பும் தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# கொழும்பில் மீட்கப்பட்ட இரு ஆண்களின் சடலங்கள்

கொழும்பின் இருவேறு பகுதிகளில் சந்தேகத்திற்கிடமாக உயிரிழந்த இரு ஆண்களின் சடலங்களை பொலிஸார் மீட்டுள்ளனர். அதன்படி தெஹிவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிறிவர்தன வீதிப் பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து இளைஞனின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. தெஹிவளை பொலிஸ் நிலையத்திற்கு நேற்று இரவு கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போதே சடலம் கண்டுப்பிடிக்கப்பட்டது.

உயிரிழந்தவர், தெஹிவளை பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞன் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சடலம் பிரேத பரிசோதனைக்காக களுபோவில வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை தெஹிவளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இங்குருகடை சந்தி பகுதியில் சந்தேகத்திற்கிடமான சடலமொன்று நேற்று கண்டுப்பிடிக்கப் பட்டுள்ளது. உயிரிழந்தவரின் அடையாளம் இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை எனவும், அவர் 35 முதல் 40 வயதுக்குட்பட்ட ஆண் எனவும் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. அவர் சுமார் 5 அடி 4 அங்குல உயரம் கொண்டவர் எனவும் கருப்பு காற்சட்டை மற்றும் மேல் உடலில் கருப்பு டி-சர்ட் அணிந்திருந்தார் எனவும் பொலிஸார் அடையாளங்களை வெளிப்படுத்தியுள்ளனர். சடலம் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ஐ)



# தண்டனைச் சட்ட திருத்தம் மாணவர்களின் ஒழுக்கத்தை சீர்குலைக்கும்- விமல் வீரவன்ச

கொழும்பு, செப் .30

தண்டனைச் சட்டக்கோவை திருத்தம் சட்டமூலம் மாணவர்களின் ஒழுக்கத்தை சீர்குலைத்து தன்பாலின கலாசாரத்தை ஊக்குவிக்கும் சூழலை ஏற்படுத்தும். இந்த சட்டமூலத்தை அரசாங்கம் உடன் மீளப்பெற வேண்டும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

தேசிய சுதந்திர முன்னணியின் காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தண்டனைச் சட்டக்கோவை திருத்தம் சட்டமூலத்தை அரசாங்கம் அவசரமாக பாராளுமன்றத்துக்கு கொண்டு வந்துள்ளது. இந்த சட்டமூலம் குறித்து ஆசிரியர்கள், பெற்றோர்கள் விசேட கவனம் செலுத்த வேண்டும்.

கல்வி அமைச்சராக பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய இந்த சட்டமூலம் பற்றி குறிப்பிடுகையில், பாடசாலை மாணவர்களை மாத்திரம் இலக்காகக் கொண்டுவரப்படவில்லை என்று தெரிவித்துள்ளார். இந்த சட்டமூலத்தில் அவமானப்படுத்தல் என்பதற்கு முறையான வரைவிலக்கணம் வழங்கப்படவில்லை.

இந்த சட்டமூலத்தின் ஊடாக புதிய லிபரல்வாத கொள்கை மற்றும் தன்பாலின கலாசாரம் ஆகியவற்றை செயற்படுத்தவே அரசாங்கம் முயற்சிக்கிறது.

இலங்கையின் பாரம்பரியமான குடும்ப முறைமையை இல்லாதொழிக்கவே அரசாங்கம் இவ்வாறான சட்டமூலங்களை கொண்டு வந்துள்ளது.

இந்த சட்டமூலம் சட்டமாக்கப்பட்டால் மாணவர்கள் பாடசாலைக்கு பொருத்தமற்ற ஆடையிலோ அல்லது உடலில் பச்சை குத்திக் கொண்டு வந்தாலோ ஆசிரியர்களால் அவர்களை தண்டிக்க முடியாத நிலை ஏற்படலாம்.

அவ்வாறு தண்டித்தால் மாணவர்கள் அதனை அவமானப்படுத்தலாக கருதி ஆசிரியர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கலாம். இந்த சட்டமூலம் சமூக கட்டமைப்பில் குறிப்பாக பாடசாலை கல்வி கட்டமைப்பில் வீண் முரண்பாடுகளை ஏற்படுத்தும்.

ஆகவே இந்த சட்டமூலத்தை அரசாங்கம் உடன் வாபஸ் பெற வேண்டும். மகாநாயக்க தேரர்கள் இவ்விடயத்தில் தலையிட வேண்டும் என்று வலியுறுத்துவோம் என்றார். (ஐ)



# அநுர அணியை விரைவில் வீட்டுக்கு விரட்டியடிப்போம்! நாமல் நம்பிக்கை



கொழும்பு, செப் .30

மக்களின் ஆணையை மீறிச் செயற்படும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவையும் அவர் தலைமையிலான அரசையும் மக்களின் ஆதரவுடன் மிக விரைவில் வீட்டுக்கு விரட்டியடிப்போம் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஜனாதிபதி அநுர மீதும் அவர் தலைமையிலான அரசு மீதும் நாட்டு மக்கள் கடும் அதிருப்தியடைந்துள்ளனர். மக்களின் ஆணையை மீறி அவர்கள் செயற்பட்டு வருகின்றார்கள்.

அரசின் முறையற்ற தீர்மானங்களுக்கு எதிராகப் போராடும் மக்களை பொலிஸார் மூலம் துன்புறுத்தி அடக்க ஜனாதிபதி முயல்கின்றார்.

கடந்த ஆட்சியாளர்களுக்கு எதிராகப் போலிக் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து அவர்களை ஜனாதிபதி அநுரவும் அவர் தலைமையிலான அரசும் திட்டமிட்டுப் பழிவாங்கி வருகின்றனர்.

இந்த அநுர அணியை மக்களின் ஆதரவுடன் மிக விரைவில் வீட்டுக்கு விரட்டியடிப்போம். மொட்டுக் கட்சியின் ஆட்சி மீண்டும் மலரும் என்பது உறுதி.

மேலும் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்காக தன்பாலினத்தவர்களுக்குரிய வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்குமாறு சுற்றுலாத்துறை அதிகார சபை அறிவித்துள்ளமை முறையற்றது. இந்த தீர்மானத்தை அரசாங்கம் மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இது இலங்கையின் கலாசாரத்துக்கு பொருத்தமற்றது. ஆகவே அரசாங்கம் இந்த தீர்மானத்தை மீள்பரிசீலனை செய்ய வேண்டும். 16 வயது பிள்ளை சுய விருப்பத்தின் அடிப்படையில் உடலுறவில் ஈடுபட்டால் என்ன பிரச்சினை உள்ளது என்று அமைச்சர் ஒருவர் பாராளுமன்றத்தில் குறிப்பிட்டார்.

ஹன்சாட் பதிவிலும் இது உள்ளது. பிள்ளைகள் உள்ள பெற்றோர் எவ்வாறு இப்படி பேசுகிறார்கள் என்பதை அறிய முடியவில்லை என்றார். (ஐ)

# உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் காப்பாளராக செந்தில் தொண்டமான்?






கொழும்பு, செப் .30

உலகத் தமிழ்ப்பண்பாட்டு இயக்கத்தின் காப்பாளராக பொறுப்பேற்குமாறு இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமானுக்கு உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து, உலகத் தமிழ்ப்பண்பாட்டு இயக்கத்தால் செந்தில் தொண்டமானுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில்,

"தமிழ்ப் பண்பாட்டுத் தலைநகராக விளங்கும் யாழ்ப்பாணத்தில். தமிழ்ப் பண்பாட்டு வழி உலகளாவிய தமிழர்களை ஒருங்கிணைப்பதையும் தமிழ் மொழி வளர்ச்சி மற்றும் தமிழர் இன மேம்பாடு ஆகியவற்றுக்குப் பாடுபடுவதையும் நோக்கமாகக் கொண்டு உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் (உ த ப இ) 1974 ஆம் ஆண்டில் ஆவணஞானி குரும்பசிட்டி கனகரத்தினம் அவர்களால் தோற்றுவிக்கப் பெற்றது.

பத்துக்கும் மேற்பட்ட நாடுகளில் கிளைகளைக் கொண்டு, கடந்த 50 ஆண்டுகளாகத் தொய்வின்றித் தொடர்ந்து தமிழ் தமிழர் மேம்பாட்டுப் பணிகளை ஆற்றி வருகின்ற இவ்வியக்கம் அண்மையில் சென்னையில் பொன் விழாவைக் கோலாகலமாகக் கொண்டாடியது.


பொதுவாகத் தமிழ்மொழி வளர்ச்சியிலும் தமிழர் இன முன்னேற்றப் பணிகளிலும், சிறப்பாகத் தமிழ்த் தொழிலாளர்களின் மேம்பாட்டுப் பணிகளிலும் தாங்கள் தொடர்ந்து தொண்டாற்றி வருவது போற்றுதலுக்கும் பாராட்டுதலுக்கும் உரியதாகும்.

எண்ணற்ற தமிழர்களின் வாழ்வில் ஒளி பாய்ச்சிய பல சாதனைகளைப் புரிந்துள்ள தங்களை உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் காப்பாளராக இருந்து எங்களை ஆற்றுப்படுத்த வேண்டும் என்று அண்மையில் நடைபெற்ற உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் செயலவைக் கூட்டத்தில் முடிவு செய்துள்ளோம்.

எங்களின் அன்பான இவ்வேண்டுகோளை ஏற்று, உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் காப்பாளராகத் தாங்கள் தொண்டாற்ற வேண்டும் எனக் கனிவுடன் கேட்டுக் கொள்ளுகிறோம்." என இக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஐ)

# நாளை முதல் பேருந்துகளில் கட்டாயமாக்கப்படும் நடைமுறை



மாகாணத்துக்குள் தனியார் பேருந்துகளில் பயணிக்கும் அனைத்து பயணிகளும் செல்லுபடியான பயணச்சீட்டுகளைப் பெறுதல் அவசியம் என மேல் மாகாண போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த விடயத்துக்கு ஒத்துழைப்பை வழங்க மறுக்கும் பயணிகள் மற்றும் நடத்துநர்களுக்கு எதிராக அபராதம் விதிக்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இரண்டு மடங்கு அபராதம்

தற்போது, பயணச்சீட்டை வழங்கத் தவறும் நடத்துநர்களுக்கு 750 ரூபாய் அபராதம் விதிக்கப்படுவதாகவும் கூறப்பட்டுள்ளது.

இந்த நிலையில், நாளைமுதல் பயணச்சீட்டு இல்லாத பயணிகளுக்கு 100 ரூபாய் அபராதம் மற்றும் கட்டணத்தை விட இரண்டு மடங்கு அபராதம் விதிக்கப்படும் என மேல் மாகாண போக்குவரத்து ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

எதிர்காலத்தில் குறித்த அபராத தொகையில் திருத்தம் மேற்கொள்ளப்படும் எனவும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பயணிகள் முச்சக்கர வண்டிகளின் பதிவு மற்றும் உரிமம் 2002 விதிமுறைகளின் கீழ் மீண்டும் ஆரம்பமாகும் என ஆணைக்குழு உறுதிப்படுத்தியுள்ளது.

பயணிகள் போக்குவரத்தில் இயங்கும் அனைத்து முச்சக்கர வண்டிகளும் ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட வேண்டும் மற்றும் செல்லுபடியாகும் அனுமதிகளை வைத்திருக்க வேண்டும் என்பதே இந்த விதிகளின் முக்கிய நோக்கம் என மேல் மாகாண போக்குவரத்து ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. (ஐ)

# விஜய் பிரசாரத்தின் போது 41 பேர் பலியான வழக்கை சிபிஐக்கு மாற்ற வேண்டும்: தவெக மனு ஐகோர்ட் கிளையில் அக்.3ல் விசாரணை

தவெக துணை பொதுச் செயலாளர் ஆதவ் அர்ஜுனா, ஐகோர்ட் மதுரை கிளையில் தாக்கல் செய்த மனு: தவெக தலைவர் விஜய் பங்கேற்கும் கூட்டங்களுக்கு கேட்கும் இடங்களில் அனுமதி தருவதில்லை. பெரிய அளவிலான கூட்டத்திற்கு அனுமதிக்க முடியாத, சிறிய பகுதிகளில் அனுமதி வழங்கியுள்ளனர்.

கடந்த 27ம் தேதி கரூரில் விஜய் பங்கேற்ற கூட்டத்தின்போது காவல்துறை மற்றும் உள்ளூர் அரசியல் பிரமுகரால் தேவையற்ற விரும்பத்தகாத நிகழ்வு நடந்துள்ளது. விஜய் பேச துவங்கியதும், மின்சாரம் துண்டிக்கப்பட்டது. அப்போதுதான் அதிக நெரிசல் ஏற்பட்டுள்ளது. 10 நிமிடம் தான் விஜய் பேசினார். அப்போது கூட்டத்திற்குள் புகுந்த சமூகவிரோதிகள் கற்கள் மற்றும் செருப்புகளை வீசினர். இதனால், ஏற்பட்ட நெரிசலால் மூச்சுத்திணறல் ஏற்பட்டுள்ளது.

எனவே, இந்த விவகாரத்தில் சிபிஐ விசாரணை நடக்காவிட்டால் உண்மையை வெளிச்சத்திற்கு கொண்டு வர முடியாது. பல்வேறு சந்தேகங்கள் உள்ளன. எனவே, சம்பவ இடத்திலும், அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் உள்ள சிசிடிவி காட்சிகளைப் பாதுகாக்குமாறும், பாதிக்கப்பட்டோர் மற்றும் அவர்களது குடும்பத்தினரை சந்திக்க விஜய் உள்ளிட்ட எங்களை தடுக்கக் கூடாது என்றும், 27ம் தேதி கரூரில் நடந்த துயரச் சம்பவம் குறித்த வழக்கு விசாரணையை, சிபிஐக்கு மாற்றி உத்தரவிட வேண்டும். இவ்வாறு கூறியுள்ளார். இந்த மனு மீதான விசாரணை விடுமுறை கால அமர்வில் வரும் 3ம் தேதி விசாரணைக்கு வரவுள்ளது.(ஐ)






## கரூர் துயரம் தொடர்பாக தவறான தகவல் பரப்பியதாக யூடியூபர் ஃபெலிக்ஸ் ஜெரால்டு கைது

கரூர் துயரம் தொடர்பாக தவறான தகவல் பரப்பியதாக யூடியூபர் ஃபெலிக்ஸ் ஜெரால்டு கைது செய்யப்பட்டார். யூடியூபர் பெலிக்ஸ் ஜெரால்டு கைது செய்யப்பட்டு சென்னை காவல் ஆணையர் அலுவலகத்தில் அவரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கடந்த 27ம் தேதி கரூரில் நடைபெற்ற தமிழக வெற்றிக் கழக பிரசார கூட்டத்தில் ஏற்பட்ட நெரிசலில் பெண்கள், குழந்தைகள் உள்பட 41 பேர் உயிரிழந்தனர். இந்த சம்பவம் தொடர்பாக சமூக வலைத்தளங்களில் வதந்தி பரப்பினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று போலீசார் எச்சரித்திருந்தனர்.

இந்நிலையில் கரூர் சம்பவம் குறித்து தனது யூடியூப் சேனலின் அவதூறு பரப்பும் வகையில் பேசியதால் பிரபல யூடியூபரான ஃபெலிக்ஸ் ஜெரால்டை போலீசார் இன்று கைது செய்தனர். டியூபர் பெலிக்ஸ் ஜெரால்டு கைது செய்யப்பட்டு சென்னை காவல் ஆணையர் அலுவலகத்தில் அவரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது

பொது அமைதிக்கு பங்கம் விளைவிக்கும் வகையில் வதந்திகளை பரப்பிய 25 பேர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. வழக்குப் பதிவு செய்யப்பட்ட 25 பேரையும் கைது செய்ய சென்னை காவல்துறை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

மேலும், கரூரில் விஜய் பிரச்சார கூட்ட துயர சம்பவம் விவகாரத்தில் தெற்கு நகர தவெக பொருளாளர் பவுன்ராஜ் இன்று காலை கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட பவுன்ராஜை கரூர் நகர காவல் நிலையம் அழைத்து சென்று போலீசார் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நேற்று (செப்.29) இரவு தவெக கரூர் மாவட்ட செயலாளர் மதியழகன் கைது செய்யப்பட்டுள்ளார்.(ஐ)

## அதானி குழுமத்துக்கு சொத்துக்கள் விற்கும் சஹாரா நிறுவனம்: உச்சநீதிமன்ற அனுமதி கோரி மனு



சஹாரா இந்திய கமர்ஷியல் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனம் தனது சொத்துக்களை அதானி குழுமத்திடம் விற்பனை செய்வதற்கு உச்சநீதிமன்றத்திடம் அனுமதி கோரி விண்ணப்பித்துள்ளது. சஹாரா இந்திய கமர்ஷியல் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனத்தில் ஏராளமானவர்கள் முதலீடு செய்திருந்தனர். இந்நிலையில் நிறுவனம் கடந்த 2012ம் ஆண்டு முறையான அனுமதி பெறாமல் முழுமையாக மாற்றத்தக்க கடன் பத்திரங்களை விற்பனை செய்துள்ளது. இதனை தொடர்ந்து நிறுவனம் வட்டியுடன் அந்த தொகையை திரும்ப செலுத்த உத்தரவிடப்பட்டது.

2023ம் ஆண்டு சஹாரா நிறுவனர் சுப்ரதா ராய் இறந்த பின்னர் நிறுவனம் முடிவெடிக்கும் அதிகாரம் உள்ள ஒரே நபரை இழந்தது. அவரது குடும்ப உறுப்பனர்கள் நிறுவனத்தின் அன்றாட வணிக நடவடிக்கைகள் மற்றும் நிர்வாகத்தில் ஈடுபடவில்லை. இதனை தொடர்ந்து நீதிமன்றத்தின் அனுமதி பெற்று சஹாரா சொத்துக்களை விற்பனை செய்வதற்கு முடிவு செய்துள்ளது. மகாராஷ்டிராவின் ஆம்பி வேலி மற்றும் லக்னோவில் உள்ள சஹாரா சாஹர் உள்ளிட்ட பல்வேறு சொத்துக்களை அதானி பிராப்பர்டீஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்கு விற்பனை செய்ய முடிவு செய்து உச்சநீதிமன்றத்தின் அனுமதி கோரி சஹாரா மனுத்தாக்கல் செய்துள்ளது. (ஐ)

## ‘மார்பில் சுடப்படுவார்’ ராகுல் காந்திக்கு கொலை மிரட்டல்:



‘ராகுல் காந்தி மார்பில் சுடப்படுவார்’ என கொலை மிரட்டல் விடுத்த ஏபிவிபி முன்னாள் மாநிலத் தலைவர் மகாதேவ் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி காங்கிரஸ் கட்சி ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவுக்கு கடிதம் எழுதியுள்ளது. மக்களவை எதிர்க்கட்சி தலைவரான ராகுல் காந்தி வாக்கு திருட்டு தொடர்பாக நாடு முழுவதும் பாஜவுக்கு எதிராக தீவிரமாக பிரசாரம் செய்து வருகிறார். இந்நிலையில், மலையாள டிவி சேனல் விவாத நிகழ்ச்சியில் பேசிய பாஜ செய்தித் தொடர்பாளரும் அகில பாரதிய வித்யார்த்தி பரிஷத் எனும் ஆர்எஸ்எஸ் மாணவர் அமைப்பின் கேரள மாநில முன்னாள் தலைவருமான மகாதேவ், “ராகுல் காந்தி மார்பில் சுடப்படுவார்” என சர்ச்சைக்குரிய கருத்து தெரிவித்தார்.

இதுதொடர்பாக காங்கிரஸ் பொதுச் செயலாளர் வேணுகோபால், ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவுக்கு நேற்று முன்தினம் கடிதம் எழுதி உள்ளார். அதில் கூறப்பட்டுள்ளதாவது: ‘ராகுல் காந்தி மார்பில் சுடப்படுவார்’ என்று மகாதேவ் வெளிப்படையாக கூறியது வன்முறையைத் தூண்டும் வெட்கக்கேடான செயல். இது வாய் தவறியோ அல்லது கவனக்குறைவாகவோ பேசிய வார்த்தைகள் அல்ல. இது எதிர்க்கட்சி தலைவருக்கும் முன்னணி அரசியல் தலைவர்களில் ஒருவருக்கும் எதிரான இரக்கமற்ற, திட்டமிட்ட மற்றும் பயமுறுத்தும் கொலை மிரட்டல்.

ஆளும் கட்சியின் அதிகாரப்பூர்வ செய்தித் தொடர்பாளர் ஒருவர் இதுபோன்ற நச்சு வார்த்தைகளை உச்சரிப்பது ராகுல் காந்தியின் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்துவது மட்டுமல்லாமல், அரசியலமைப்பு, சட்டத்தின் ஆட்சி மற்றும் ஒவ்வொரு குடிமகனுக்கும் கொடுக்க வேண்டிய அடிப்படை பாதுகாப்பு உத்தரவாதங்களையும் குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது. இதுவரையிலும் மகாதேவ் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ராகுல் காந்திக்கு எதிரான கொலை மிரட்டல் என்பது தனிநபர் மீதான தாக்குதல் மட்டுமல்ல, அவர் பிரதிநிதித்துவப்படுத்தும் ஜனநாயக உணர்வின் மீதான தாக்குதல். எனவே, நீங்கள் விரைவாகவும், தீர்க்கமாகவும், பகிரங்கமாகவும் செயல்படத் தவறினால், அந்த தாக்குதலுக்கு உடந்தையாக இருப்பதாக கருதப்படும் உங்கள் கட்சியும் அரசும் எதற்காக நிற்கிறது என்பதை தெளிவுபடுத்துவது இப்போது உங்கள்

நீதி விரைவாகவும், வெளிப்படையாகவும், கடுமையாகவும் இருக்க, மாநில காவல்துறை மூலம் உடனடியாகவும், முன்மாதிரியான சட்ட நடவடிக்கையையும் நாடு கேட்கிறது. இவ்வாறு வேணுகோபால் கூறி உள்ளார். இதற்கிடையே பாஜ செய்தித் தொடர்பாளர் மகாதேவ் மீது கேரள போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர். ராகுலுக்கு கொலை மிரட்டல் விடுத்தது தொடர்பாக அவர் மீது திருச்சூர் போலீசில் காங்கிரசார் புகார் செய்தனர். அதனை ஏற்று போலீசார் விசாரணை துவங்கி உள்ளனர்.

காங்கிரஸ் பொதுச் செயலாளர் கே.சி. வேணுகோபால் நேற்று அளித்த பேட்டியில், “ராகுல் காந்திக்கு கொலை மிரட்டல் விடுத்தது தொடர்பாக கேரள காவல்துறை ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று எனக்குத் தெரியவில்லை. அதனால்தான் நான் அமித் ஷாவுக்கு கடிதம் எழுதினேன். இது ஒரு பெரிய சதியின் ஒரு பகுதி என்று நாங்கள் நினைக்கிறோம். உள்துறை அமைச்சரிடமிருந்து எனக்கு இன்னும் எந்த பதிலும் கிடைக்கவில்லை” என்றார். (ஐ)



# பெண்ணுக்கு நீதி ஆணுக்கு ஒரு நீதி!

இயக்குனர் பாலாஜி சக்திவேல் தனது 'காதல்' திரைப்படம் பற்றி பேசும்பொழுது, 'காதல் தோல்வி அடைந்த ஆண்களின் கதைகளை படித்திருக்கிறோம், பார்த்திருக்கிறோம். ஆனால் காதல் தோல்வி அடைந்த பெண்ணை பற்றி இங்கே பேசுவதேயில்லை' என்றார்.

'தேவதாஸ்' காலம் தொடங்கி வந்த அனைத்து திரைப்படங்களிலும், காதல் தோல்வி அடைந்த பெண் ஒன்று வேறு ஒருவரை மணந்து கொள்வார், இல்லையென்றால் தற்கொலை செய்து கொள்வார். காதல் தோல்வி அடைந்த பெண்கள் திருமணமே செய்து கொள்ளாமல் இருக்கும் கதாபாத்திரங்களாக இருந்தாலும், அவை எல்லாம் கதாநாயகியாக சித்தரிக்கப்படுவதில்லை.

காதல் தோல்வியின் துயரத்தைத் தாண்டி, அதில் அதிகம் பாதிக்கப்படுவது பெண்கள்தான். காதல் விஷயம் வீட்டில் தெரிந்தால், எந்த ஆணையாவது வீட்டில் வைத்து பூட்டி பார்த்திருக்கிறீர்களா? அடித்து?


இதுவே பெண்கள் என்றால், வீட்டை விட்டு எல்லாம் இல்லை, ஒரு கழிவறைக்குக்கூட தனியாகப் போக முடியாது. காதல் தோல்வியினால் விரக்தியில் இருக்கும் ஆண், தன் நண்பர்களை சந்திக்கலாம். மன வேதனையை தீர்த்துக் கொள்ள குடிக்கலாம். இரவு நெடு நேரம் கழித்து வீட்டிற்கு வரலாம். பெண்கள் , தங்கள் நண்பர்களை வீட்டில் பார்ப்பதற்குக்கூட அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

காதல் தோல்விக்குப் பிறகான திருமணத்தில்கூட ஆண்களுக்கு இருக்கும் சுதந்திரம் பெண்களுக்கு இருப்பதில்லை. காதல் தோல்வி அடைந்த எத்தனை ஆண்களை இரண்டாம் தாரமாக ஒரு பெண்ணிற்கு கட்டி வைத்திருக்கிறார்கள்? குறைந்த பட்சம் அந்த ஆண் அந்தத் தோல்வியில் இருந்து மீண்டு வருவதற்கான அவகாசமாவது கொடுக்கப்படுகிறது. பெண்களுக்கு?





ஆணவப் படுகொலை செய்து கொல்லப்பட்ட கோகுல்ராஜ் கொலை வழக்கின் மேல்முறையீட்டுத் தீர்ப்பு வந்த சமயத்தில், அதுவரை, பொது சமூகத்தால் அறியப்பட்ட, அனைத்து ஆணவப் படுகொலைகளும் பேசுபொருள் ஆகின. அதில் ஒன்று கண்ணகி முருகேசன் படுகொலை. அதை பற்றிப் பேசிய பலரும் 'அந்த பய சும்மா தான் இருந்தான். இந்த புள்ளதான் அவனை முதல்ல காதலிச்சுது' என்று கூறியதைக் காண முடிந்தது. 'சும்மா' இருந்த பையனைக் காதலித்து, அவனையே திருமணம் செய்து, அவனுடனே உயிர் துறந்த கண்ணகிக்கு அந்த மரியாதைதான் கிடைத்தது. காதலில் ஆண் என்ன பெண் என்ன! யாருக்கு அந்த உணர்வு முதலில் வருகிறதோ, அவர் தானே முதலில் வெளியிடுவார்?



இதில் ஆடைகள் களைந்து, சித்ரவதைக்கு உள்ளாகி கொல்லப்பட்ட முருகேசன் என்னவெல்லாம் அனுபவித்தாரோ, அதையும் தாண்டி கண்ணகி பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்பட்டார். அதைப் பற்றி எத்தனை ஆண்கள் பேசி இருக்கிறார்கள்?அது ஏன் ஆண்களுக்கு ஏற்படும் துயர் எப்போதும் பெண்களின் துயரை, அவள் அவனைவிட அதிக துயரை அனுபவித்திருந்தால்கூட, அதிமாக சித்தரிக்கப்படுகிறது? இது ஒரு ஆணாதிக்க சமூகம் என்பதைத் தாண்டி அதில் வேறு என்ன இருந்துவிடப் போகிறது?

ஆணவப் படுகொலையால் உயிரை இழக்கும் ஆண்களின் வலியை அவ்வளவு எளிதாகக் கடந்து போய்விட முடியாதுதான். ஆனால் அவனின் மரணத்திற்குப்பின் அந்த பெண்ணின் நிலையை பற்றி யார் அக்கறை கொள்கிறார்கள். கொலைக்கு முன்னாலும் கொலைக்கு பிறகும் அந்த பெண்களுக்கு வீட்டில் கொடுக்கப்படும் நெருக்கடியை பற்றி யார் பேசப்போவது? வேறு ஜாதி எல்லாம் இல்லை, தன் சொந்த ஜாதியிலேயே காதலிக்கும் பெண்களுக்கு எவ்வளவு நெருக்கடிகள் இருக்கின்றன? இவை எல்லாமே அவள் பெண் என்பதினால்தான்.

மலையாளத்தில் வெளியான 'உள்ளொழுக்கு' பெரும் வரவேற்பைப் பெற்றது. 'திருமணம் ஆன பெண்ணிற்கு திருமணம் ஆகாத வேறு ஒரு ஆணுடன் தொடர்பு'- ஒருவேளை அந்தத் திரைப்படம் உண்மை சம்பவமாக இருந்திருத்தால், இப்படித்தான் செய்தி வெளியாகி இருக்கும். திரைப்படம் முழுவதிலும் அந்த பெண் எப்படி வஞ்சிக்கப்படுகிறாள் என்பதே கதை.

ஒருவனை காதலிக்கிறாள். மத வேறுபாடு காரணமாக அந்தத் திருமணத்திற்கு அவளின் பெற்றோர்கள் சம்மதிக்கவில்லை. வேறு ஒருவனுக்கு மணம் முடிக்கிறார்கள். அவளின் விருப்பத்தை தெரிந்து கொள்ளாமலே அவளுடன் உறவு கொள்கிறான் கணவன். எங்காவது முதலிரவில் கணவனுக்குப் பிடிக்காமல் மனைவி உறவு கொண்டதைப் பற்றி கேள்விப்பட்டதுண்டா?

திருமணம் ஆகி சில நாட்களில் கணவனுக்கு உடை நிலை சரி இல்லாமல் போகிறது. அவனது இயல்பு வாழ்க்கைக்குக்கூட அந்தப் பெண்ணையே நம்பி இருக்க வேண்டிய கட்டாயம். வீட்டில் இருந்தபடியே அவனுக்குத் தேவையான அனைத்தையும் செய்கிறாள். பின்னொரு நாளில்தான் தெரிகிறது, திருமணத்திற்கு முன்பே அவனுக்கு நோய் இருந்திருக்கிறது என்று.

இதில் அந்த ஆணுக்கு பதில் அந்தப் பெண்ணுக்கு நோய் இருந்திருந்தால், அந்தக் கணவன், தான் காதலித்த பெண்ணை மறந்து, முதல் இரவில் வலுக்கட்டாயமாக உறவு வைத்து கொண்ட, தனக்கு விருப்பமில்லாத மனைவியை வேலை எதற்கும் செல்லாமல், அவளுக்கு வேண்டியதை கவனித்துக் கொள்வானா? நிச்சயமாக கவனித்து கொள்வான். அவள் பெரும் பணக்காரியாக இருக்கும் பட்சத்தில்! தங்கள் மகளுக்கு ஒரு நோய் இருக்கிறது என்பதை மறைத்துத் திருமணம் செய்து வைத்து, அது பின்னொரு நாளில் தெரிய வந்தால், அந்த ஆணின் நடவடிக்கை என்னவாக இருந்திருக்கும்? ஒருவேளை திருமணத்திற்கு முன்பே அந்த நோய் சரி ஆகி இருந்தாலும்கூட அந்த ஆண் அந்தப் பெண்ணுடன் வாழ்ந்திருப்பானா என்பதே கேள்விக்குறி.

வீட்டில் நோய்வாய்ப்பட்டிருக்கும் மனைவியை கவனித்துக் கொண்டே, தன் மனதிற்கு பிடித்தவளுடன் தொடர்பில் இருக்கும் ஒரு ஆணை இந்த சமூகம் என்ன சொல்லும்? 'மனைவி நோய்வாய் பட்டிருக்கிறாள். அவளை மிக நன்றாக கவனித்து கொள்கிறான். ஆனால் அவனுக்கும் தேவை என்று ஒன்று இருக்கும்தானே? அந்த இன்னொரு பெண் விருப்பப்பட்டுத்தானே அவனுடன் இருக்கிறாள்' என்பார்கள். இதையே ஒரு பெண் செய்தால், அவளுக்கு பல பெயர்கள்.

ஒரு பெரும் போராட்டத்திற்குப் பிறகு, தன் கணவனை இழந்த அந்த பெண், தன் காதலனுடன் சேரும் தருணம், அந்த காதலனின் எண்ணம் வேறு விதமாக மாறி இருக்கும். ஒருவேளை அந்தப் பெண் தன் காதலனை மணம் முடித்திருந்தால்கூட, திருமணத்திற்கு பிறகு, இரண்டாம் தார மனைவியைப் போல, ஒரு இரண்டாம் தார கணவன் இருப்பதில்லை. ஏதோ பெரிய தியாகம் செய்து விட்டவனைப்போலதான் நடவடிக்கைகள் இருக்கும்.

இங்கு ஆணுக்கு ஒரு நீதி பெண்ணுக்கு ஒரு நீதி, சமத்துவம் பேசும் முற்போக்காளர்களுக்குக்கூட.

# அமெரிக்க தேவாலயத்தில் துப்பாக்கி சூடு நடத்தி தீ வைப்பு: 4 பேர் பரிதாபமாக பலி, 8 பேர் காயம்



அமெரிக்காவில் தேவாலயத்திற்குள் டிரக்கை ஓட்டிச் சென்று புகுந்த மர்ம நபர் கண்மூடித்தனமாக துப்பாக்கி சூடு நடத்தி தீ வைத்ததில் 4 பேர் உயிரிழந்தனர். மேலும் 8 பேர் காயமடைந்தனர். அமெரிக்காவில் வழிபாட்டுத் தலங்கள் மீதான தாக்குதல்கள் அதிகரித்து வருகின்றன. வடக்கு கரோலினா, டெக்சாஸ் மாகாணங்களைத் தொடர்ந்து, மூன்றாவது பெரிய துப்பாக்கிச்சூடு சம்பவம் நடந்துள்ளது. மிச்சிகன் மாகாணம், கிராண்ட் பிளாங்க் டவுன்ஷிப்பில் உள்ள மோர்மன் தேவாலயத்தில் கடந்த 28ம் தேதி காலை 10.25 மணியளவில் ஞாயிறு சிறப்புப் பிரார்த்தனை நடைபெற்றது. குழந்தைகள் உட்பட நூற்றுக்கணக்கானோர் இதில் பங்கேற்றிருந்தனர்.

அப்போது ஒருவர் பிக்கப் வாகனத்தால் தேவாலயத்தின் முன்பக்க கதவுகளை உடைத்துக்கொண்டு உள்ளே புகுந்தார். பின்னர், தன்னிடமிருந்த அதிநவீன துப்பாக்கியால் அங்கிருந்த கிறிஸ்தவர்கள் மீது கண்மூடித்தனமாக சுட்டார். அத்துடன், தான் கொண்டு வந்திருந்த பெட்ரோல் போன்ற எரிபொருளை ஊற்றி தேவாலயத்திற்கு தீ வைத்தார். தகவலறிந்து சில நிமிடங்களில் காவல்துறையினர் அங்கு விரைந்தனர். பின்னர் துப்பாக்கிச்சூடு நடத்தி தாக்குதல் நடத்திய நபரை சுட்டுக்கொன்றனர். துப்பாக்கி சூடு நடத்திய நபர், அண்டை நகரமான பர்ட்டனை சேர்ந்த தாமஸ் ஜேக்கப் சான்ஃபோர்ட் என அடையாளம் காணப்பட்டுள்ளது. இந்த தாக்குதலில் 4 பேர் பலியானார்கள். மேலும் 8க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். தீ விபத்தில் தேவாலயம் முற்றிலும் சேதமடைந்தது. (ஐ)

## கரூரில் 41 பேர் பலி சீனா இரங்கல்



தமிழ்நாட்டின் கரூரில் நடிகர் விஜய்யின் அரசியல் பரப்புரையின் போது கூட்ட நெரிசலில் சிக்கியதில் 41 பேர் பலியானார்கள். இந்த சம்பவத்தில் பலியானவர்களின் குடும்பங்களுக்கு சீனா இரங்கல் தெரிவித்துள்ளது. சீன வெளியுறவு அமைச்சக செய்தி தொடர்பாளர் குவோ ஜியாகுன் நேற்று கூறுகையில்,கரூரில் நடிகர் விஜய் பிரசார கூட்டத்தில் சிக்கி உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கு எங்கள் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம். அதே போல் படுகாயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய வேண்டும். இந்தியாவில் உள்ள சீன தூதரகம் தனது அனுதாபத்தையும் இரங்கலையும் தெரிவித்து கொள்கிறது என்று தெரிவித்தார். (ஐ)




## லுப்தான்சா நிறுவனத்தில் 4000 வேலை குறைப்பு

லுப்தான்சா விமான நிறுவனம் 4000 வேலைகளை குறைக்க உள்ளதாக தெரிவித்துள்ளது. ஜெர்மனியின் மிகப்பெரிய விமான நிறுவனமான லுப்தான்சா ஐரோப்பாவில் 2-வது பெரிய விமான நிறுவனமாக திகழ்கிறது. லுப்தான்சா விமான நிறுவன கிளைகளில் சுமார் 25 ஆயிரம் பேர் பணிபுரிகிறார்கள். இந்த நிலையில் வரும் 2030க்குள் 4000 வேலைகளை குறைத்து அதிக லாபம் ஈட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்று லுப்தான்சா தெரிவித்துள்ளது. டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் ஆட்டோமேஷன் மூலம் செயல் திறனை அதிகரிக்க திட்டமிட்டுள்ளது. இந்த அறிவிப்பை தொடர்ந்து லுப்தாசா நிறுவனத்தின் பங்குகள் உயர்ந்து ஆரம்ப வர்த்தகத்தில் 2 சதவீதம் உயர்ந்தன. லுப்தான்சா வெளியிட்டுள்ள அறிக்கை: டிஜிட்டல் மயம் மற்றும் செயற்கை நுண்ணறிவு மூலம் ஏராளமான மாற்றங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. இதன் மூலம் வர்த்தகம் மற்றும் செயல்பாட்டு திறன் அதிகரிக்கும். பெரும்பாலான வேலை குறைப்பு ஜெர்மனியில் தான் இருக்கும். இந்த மாற்றங்களின் மூலம் நிறுவனத்துக்கு பெரும் லாபம் ஏற படும். (ஐ)

## லாரன்ஸ் பிஷ்னோய் கும்பல் தீவிரவாதிகள் பட்டியலில் சேர்ப்பு: கனடா அதிரடி



இந்தியாவை சேர்ந்த லாரன்ஸ் பிஸ்னோய் பல்வேறு குற்ற வழக்குகளில் தொடர்புடையவர். தற்போது குஜராத் மாநிலம் சபர்மதி சிறையில்அடைக்கப்பட்டுள்ளார். கடந்த 2022ல் பஞ்சாபி பாடகர் சித்து மூஸேவாலா படுகொலை,மகாராஷ்டிரா முன்னாள் அமைச்சர் பாபா சித்திக்கி கொலை, பாலிவுட் நடிகர் சல்மான் கானின் வீட்டிற்கு வெளியே நடந்த துப்பாக்கிசூடு சம்பவங்களுக்கு பிஸ்னோயின் கும்பலை சேர்ந்த ரவுடிகள் தான் காரணம் என்று போலீசார் கூறினர். இந்த கும்பலை சேர்ந்தவர்கள் பலர் கனடாவில் வசித்து வருகின்றனர். இந்த நிலையில், பிஸ்னோய் கும்பலை தீவிரவாதிகள் பட்டியலில் கனடா சேர்த்துள்ளது.

இது குறித்து அந்த நாட்டின் பொது பாதுகாப்பு துறை அமைச்சர் கேரி ஆனந்தசங்கரி கூறுகையில், கனடாவில் உள்ள ஒவ்வொரு நபர்களுக்கும் தங்கள் வீட்டினுள்ளும் சமூகத்திலும் பாதுகாப்பாக உணர உரிமை உண்டு. மேலும் அவர்களை பாதுகாப்பது நமது அடிப்படை பொறுப்பாகும். பிஷ்னோய் கும்பலால் குறிப்பிட்ட சமூகங்கள் தீவிரவாதம், வன்முறை மற்றும் மிரட்டலுக்கு இலக்காகியுள்ளன என்றார். லாரன்ஸ் பிஸ்னோய் இந்தியாவில் இருந்தாலும் அவரது நெருங்கிய கூட்டாளிகள் பலர் கனடாவில் உள்ளனர்.(ஐ)

## வியட்நாமை தாக்கிய புவலாய் சூறாவளி: 9 பேர் பலி



வியட்நாமை புவலாய் சூறாவளி தாக்கியது. வியட்நாம் சாலைகளில் வெள்ளம் கரைபுரண்டோடியது. வீடுகள், பள்ளிகள், அரசு அலுவலக கட்டிடங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டன. பல மாகாணங்களில் தாழ்வான பகுதிகளில் வெள்ளநீர் சூழ்ந்துள்ளது. பல இடங்களில் வீடுகள் இடிந்து விழுந்தன. காற்றின் வேகத்தை தாக்குப்பிடிக்க முடியாமல் மேற்கூரைகள் சேதமடைந்து உடைந்து விழுந்தன. புயல் மற்றும் மழை காரணமாக ஏற்பட்ட சம்பவங்களில் சுமார் 9 பேர் உயிரிழந்தனர். மேலும் 17 மீனவர்கள் மாயமான நிலையில் மீட்பு குழுவினர் அவர்களை தேடி வருகின்றனர். (ஐ)

## சஷீந்திர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

2022 ஆம் ஆண்டு மே மாதம் 9 ஆம் திகதி நடந்த போராட்டத்தின் போது, சஷீந்திர ராஜபக்ஷவுக்குச் சொந்தமானதாகக் கூறப்படும் இலங்கை மகாவலி அதிகாரசபைக்குச் சொந்தமான, கிரிஇப்பன்வெவ, செவனகலவில் உள்ள காணியொன்றில் அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டிடம் உள்ளிட்ட சொத்துக்கள் சேதமடைந்தன.

அந்த சொத்துக்கான இழப்பீடு நிராகரிக்கப்பட்டிருந்த நிலையில், அதனை மீறி இழப்பீட்டுக்கான அலுவலகத்தின் சில அதிகாரிகளுக்கு தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி அழுத்தம் கொடுத்து இழப்பீட்டை செலுத்துமாறு பலவந்தப்படுத்தியுள்ளதாக அவர் அவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இதன்போது 8,850,000 ரூபாயை (88 லட்சம்) இழப்பீடாக பெற்றதன் ஊடாக ஊழல் முறைகேடு தொடர்பில் பொது சொத்துச் சட்டத்தின் கீழ் குற்றம் செய்துள்ளதாக சந்தேகத்தின் பேரில் அவர் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## பருத்தித்துறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சபை கூட்டம் நேற்று (திங்கட்கிழமை) காலை 9.45 மணியளவில் தவிசாளர் உதயகுமார் யுகதீஸ் தலைமையில் ஆரம்பமானது.

இதன் போது கடந்த கூட்ட அறிக்கை வாசிக்கப்பட்ட நிலையில் அதில் பல்வேறு திருத்தங்கள் செய்யவேண்டும் என்றும், சில விடயங்கள் சேர்க்கவேண்டும் என்றும் எதிர்த்தரப்பை உறுப்பினர்கள் வாதிட்டுக்கொண்டிருந்த நிலையில் தவிசாளரால் தனது கட்சி உறுப்பினர்கள் முன்மொழிவு வழிமொழிவுடன் கூட்ட அறிக்கையை ஏற்றுக்கொள்வதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அவ்வாறு ஏதும் செய்யமுடியாது என்றும், தவிசாளருக்குள்ள அதிகாரத்தின் பிரகாரம் கூட்ட அறிக்கையை நிறைவேற்ற முடியும் என்று தவிசாளர் தெரிவித்த நிலையில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பு (சங்கு) 4 உறுப்பினர்களும், தேசிய மக்கள் சக்தியின் 4 உறுப்பினர்களும், சுயேட்சைக்குழு உறுப்பினர்கள் இருவருமாக 10 உறுப்பினர்கள் ஆட்சேபம் தெரிவித்து வெளிநடப்பு செய்தனர். எதிர்கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்த போதிலும் ஆட்சியிலுள்ள தமிழரசுக்கட்சி உறுப்பினர்கள் 8 பேரும் ஈபிடிபி உறுப்பினர் ஒருவருடனும் சபை அமர்வு தொடர்ந்து இரண்டு மணிவரை இடம்பெற்றது. அதிருப்தி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்துகொண்டிருந்தபோது சபை அமர்வில் கலந்து கொள்ள இலங்கை தமிழரசு கட்சி உறுப்பினர் அமர்வில் பத்தாவது உறுப்பினராக கலந்துகொண்டார். சபை அமர்வு பத்து உறுப்பினர்களுடன் தொடர்ந்து நடைபெற்றது. இக் கூட்டத்தில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சபை அமர்வின் முடிவில் சபையை வேண்டுமென்றே எதிர்க்கட்சிகள் குழப்பிச் சென்றதாகவும், சபைக்கு முரணான விடயங்களை அறிக்கையில் சேர்க்குமாறு வற்புறுத்தியதாகவும் தவிசாளர் தெரிவித்தார்.

இதேவேளை வெளிநடப்பு செய்த பத்து உறுப்பினர்களும் தமது உரிமை மறுக்கப்படுவதாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தனர்.

## பொதுமக்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அரசாங்கத்தின் சகல துறைகளிலும் எதிர்பார்த்ததை விட அதிகளவில் வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

அதன் காரணமாக இனியும் வரிகளை விதிக்கவோ அதிகரிக்கவோ தேவையில்லை.

அதற்குப் பதிலாக வரிகளை மனிதாபிமான முறையில் மறுசீரமைக்கலாம். அதற்கான காலம் கனிந்துள்ளது.

அத்துடன் பொதுமக்களுக்கு சலுகைகள், நிவாரணங்களை வழங்கும் சூழல் ஏற்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## மதகிந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மேற்கொள்ளவில்லை என்று சட்டத்தரணி மைத்திரி குணரத்ன சுட்டிக்காட்டியுள்ளார். தற்போதைய இலஞ்சம் மற்றும் ஊழல், மோசடி தவிர்ப்பு விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ரங்க திசாநாயக்க ஜே.வி.பி .கட்சியின் சட்டப் பிரிவில் செயலாற்றிய ஒருவர் என்றும் சட்டத்தரணி மைத்திரி குணரத்ன வலியுறுத்தியுள்ளார். அத்துடன் குற்றப் புலனாய்வுத் திணைக்கள பணிப்பாளர் ஷானி அபேசேகர, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ரவி செனவிரத்ன ஆகியோர் ஜே.பி.வி. அரசியல் கூட்டங்களில் உரையாற்றியவர்கள் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆனாலும் முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிக்கா குமாரதுங்க, மகிந்த ராஜபக்ச, மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்ரமசிங்க ஆகியோர் அரசியல் கூட்டங்களில் உரையாற்றியவர்களை இவ்வாறான பதவிகளுக்கு நியமிக்கவில்லை என்றும் சட்டத்தரணி மைத்திரி குணரத்ன விமர்சித்துள்ளார்.

## உரிமைகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கல்வி மறுசீரமைப்பை இந்த அரசு முன்னெடுக்கின்றது. இந்த நடவடிக்கையின் போது உரிய ஆய்வுகளை மேற்கொள்ளாது மேற்கொள்ளப்படுகின்றது என எமது தாய்ச்சங்கம் சுட்டிக்காட்டிய போதும் அது தொடர்பில் அரசு அக்கறை கொள்ளாதிருக்கின்றது. இவ்வாறான பல பிரச்சினைகளை நாம் எதிர்கொண்டு வரும் நிலையில் அரசுடன் போச்சுக்களை நடத்தி தீர்வை எட்டியிருந்தோம். ஆனால் அந்த தீர்வை நடைமுறைப்படுத்த அரசு பின்னடிக்கின்ற நிலை காணப்படுகின்றது.

இந்நிலையில் குறித்த பிரச்சினைக்கு தீர்வை விரைவுபடுத்தும் நோக்கிலேயே இந்த ஒரு நாள் அடையாள போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

எனவே நாட்டின் முதுகெலும்பான பல்கலைக்கழக கட்டமைப்பை வலுப்படுத்த அரசு நடவடிக்கை எடுப்பது அவசியம் என்று தெரிவித்தார்.

## முப்பது வருட கால யுத்தத்தில் தமிழர்களுக்கு எஞ்சியது கல்வி மாத்திரமே- நாவிதன்வெளி தவிசாளர்!

எம் தமிழினம் முப்பது வருட கால யுத்தத்தினை சந்தித்து உடமைகள் உயிர்கள் பலவற்றை இழந்து ஏதிலிகளாக பல நாடுகளில் வாழ்ந்தாலும் உலக அரங்கிலோ எம் நாட்டிலோ எம்மவர்கள் இழக்காத சொத்து கல்வி மாத்திரமே . ஆகவே நாம் எதை இழந்தாலும் கல்வியின் பயனால் அனைத்தையும் தேடிக்கொள்ள முடியும் என்று நாவிதன்வெளி பிரதேச சபை இ.ரூபசாந்தன் தெரிவித்துள்ளார்.

நாவிதன்வெளி பிரதேச சபை தவிசாளர் இ.ரூபசாந்தனின் சிந்தனையின் செயற்பாடாய் உயர்தர பரீட்சைக்கு தோற்ற இருக்கும் மாணவர்களுக்கான நாடகமும் அரங்கியலும் பாடத்திற்கான மாதிரி வினாத்தாள் தெளிவூட்டல் செயலமர்வு இன்று காலை கமு/சது/ கலைமகள் வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வினை ஆரம்பித்து வைத்த பின்னர் மாணவர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

எம் தமிழினம் முப்பது வருட கால யுத்தத்தினை சந்தித்து உடமைகள் உயிர்கள் பலவற்றை இழந்து ஏதிலிகளாக பல நாடுகளில் வாழ்ந்தாலும் உலக அரங்கிலோ எம் நாட்டிலோ எம்மவர்கள் இழக்காத சொத்து கல்வி மாத்திரமே ஆகவே நாம் எதை இழந்தாலும் கல்வியின் பயனால் அனைத்தையும் தேடிக்கொள்ள முடியும்.

இந்த நாவிதன்வெளி பிரதேசத்திற்கு மாத்திரமல்ல



ஏனைய பகுதிகளுக்கும் கல்விக்கு நான் சேவை செய்ய ஒரு போதும் தயங்கியதில்லை . கல்வி கற்ற இளம் சமூகத்தை உருவாக்குவதன் மூலமே நாம் தனி மனித ஒழுக்கம், பொருளாதாரம் என்பவற்றை வளர்த்து முன்னேற்றம் அடைந்த சமூகத்தை உருவாக்கலாம் என தெரிவித்தார்.

## அரசுக்கு எதிராக செயற்படும் நுவரெலியா ஆணையாளர் இடமாற்றக் கோரி மக்கள் ஆர்ப்பாட்டம்!

நுவரெலியா மாவட்ட ஆணையாளர் பதவி விலக வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து நுவரெலியாவில் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா நகரில் உள்ள சுமார் அறுபதுக்கும் மேற்பட்ட அங்காடி வியாபாரிகள் இன்று காலை 11 மணி முதல் 12.30 மணி வரை ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

போராட்டக்காரர்கள் தற்போது உள்ள அரசாங்கத்தின் பணிப்புரை களை தற்போது உள்ள நுவரெலியா மாவட்ட ஆணையாளர் கணக்கெடுப்பது இல்லை. அரசுக்கு எதிராக செயற்பட்டு வருகிறார். அதன் காரணமாக நகரில் எந்த ஒரு அபிவிருத்தியும் இல்லை.

இன்றைய அரசு நுவரெலியா நகருக்கு பாரிய அபிவிருத்தி செய்ய முன் வந்த போதும் தற்போது உள்ள ஆணையாளர் செய்ய மறுத்து வருகிறார். அவரை உடனடியாக நுவரெலியா மாவட்டத்தில் இருந்து இடமாற்றம் செய்ய வேண்டும் என கோரிக்கை முன்வைத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## 110 வயதில் மகிழ்வுடன் வாழும் முதியவர் மிக வயதான மனிதராக இலங்கையில் அங்கீகாரம்!


இலங்கையில் 110 வயதில் மிக மகிழ்வுடன் வாழும் முதியவர் ஒருவர் மிக வயதான மனிதராக அதிகாரபூர்வமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளார்.

கரந்தெனியாவைச் சேர்ந்த 110 வயதான போலந்த ஹகுரு மெனியலின் என்ற விவசாயி ஒருவரே இலங்கையில் வாழும் மிக வயதான மனிதராக அதிகாரபூர்வமாக அங்கிகீகரிக்கப்பட்டுள்ளார்.

போலந்த ஹகுரு மெனியலின் என்ற நபர் 1915 ஆம் ஆண்டு ஜூன் 4ஆம் திகதி பிறந்தவர் என உறுதிப்படுத்திய பின்னரே முதியோருக்கான தேசிய செயலகம் அவரது வாழ்நிலை சாதனையை முறியடித்து இந்த அங்கீகாரத்தை வழங்கியுள்ளது.

இந்த நிலையில் அதிக வயதுடைய இலங்கையர் என்ற சாதனையை தனது 115 ஆவது வயதில் போலந்த ஹகுரு மெனியலின் பெற்றுள்ளார்.

குறித்த நபர் அதிக வயதான மனிதராக அங்கீகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து தற்போது அவரே



சமூக வலைத்தளங்களில் பேருபொருளாகியுள்ளார்.

110 வயதில் அவரது சாதனையை யாரெல்லாம் முறியடிக்க உள்ளீர்கள்?, அவரைப் போன்று இந்த வயதிலும் மகிழ்வுடன் வாழ முடியுமா? என்றவாறான வியத்தகு கருத்துக்களைப் பலர் சமூக வலைத்தளங்களில் பதிவிட்டு வருகின்றனர்.

## சீன பட்டாசுகள் பயன்படுத்துபவர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை

நாட்டில் தடைசெய்யப்பட்ட மற்றும் சட்டவிரோதமாக தயாரிக்கப்பட்ட "ஹக்கா பட்டாசுகள்" மற்றும் "சீன பட்டாசுகள்" ஆகியவற்றைப் பயன்படுத்துபவர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

நாட்டின் சில பகுதிகளில் பட்டாசுத் தொழிலிலிருந்து வெளியிடப்படும் மூலப்பொருட்கள் மற்றும் பிற இரசாயனங்களைப் பயன்படுத்தி "சீன பட்டாசுகள்" எனப்படும் சட்டவிரோத வெடிபொருட்கள் தயாரிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இந்த "சீன பட்டாசுகள்" பட்டாசு மற்றும் பட்டாசு உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் மூலப்பொருட்களைப் பயன்படுத்தி "ஹக்கா பட்டாசுகள்" எனப்படும் சட்டவிரோத வெடி பொருட்கள் தயாரிக்கப்படுவதாகத் தகவல் கிடைத்துள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது. விவசாய நிலங்களிலிருந்து காட்டு விலங்குகளை விரட்ட இவை பரவலாகப் பயன்படுத்தப்படுவதாகவும், இந்த சட்டவிரோத வெடிபொருட்களால் மக்கள் மற்றும் வனவிலங்குகளுக்கு பல கடுமையான காயங்கள் மற்றும் இறப்புகள் கடந்த காலங்களில் பதிவாகியுள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. இந்த விடயங்களைக்கருத்தில் கொண்டு, இலங்கை காவல்துறையினருடன் இணைந்து நாடு முழுவதும் சிறப்பு நடவடிக்கைகளைச் செயல்படுத்தப் பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.09.2025வெளியிடப்பெற்றது.